
# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்



## முரசொலி மாறன்

**நவம்பர் 23 (2003)**

**“திராவிட இயக்க முன்னோடி – கழகத்தின் தூண் – ஈடில்லா சிந்தனைச் செம்மல் – மாபெரும் ராஜதந்திரி – முரசொலியின் பிதாமகன் – கழகத்தின் மூளை – கலைஞரின் மனசாட்சி” என அடைமொழிகள் பலவற்றால் அன்பு தவழ அழைக்கப் பெற்றவர்.**

**தமது 35 ஆண்டு காலத்திற்கும் மேலான நாடாளுமன்ற அனுபவத்தால், நாடாளுமன்ற ஜனநாயக முறைகளை பழுதற உணர்ந்த, பேணிய பண்பாளர்.**

**மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சராக திறம்பட பணியாற்றி பெரும்புகழ் பெற்றவர்.**

**எழுத்தாளராக, பத்திரிகையாளராக, திரைப்பட கதாசிரியராக, வசன கர்த்தாவாக, பாடலாசிரியராக, இயக்குநராக, தயாரிப்பாளராக பன்முகப் பரிமாணங்கள் கொண்டவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக சிறையில் அதிகாரிகளின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு ஆளானவர்.**

**தன் இறுதிக்காலம் வரை கழகத்திற்கோ, தலைவருக்கோ, கிஞ்சித்தும் மாற்றுக் கருத்தோ, துரோக சிந்தனையோ இல்லாமல் கழகமே மூச்சென பணியாற்றிய பண்பாளர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

நாமக்கல் மாநகராட்சியில்

## துணைமேயர் அலுவலகம்!

### கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. திறந்து வைத்தார்!

நாமக்கல், நவ. 23 -

நாமக்கல் நகராட்சி கடந்த ஆகஸ்டு மாதம் முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து மேயர், துணை மேயர் ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர். இதற்கிடையே மேயருக்கு தனியாக அலுவலகம் உள்ள நிலையில், துணை மேயருக்கு அலுவலகம் இல்லாமல் இருந்தது.

இதையடுத்து ஆணையாளர் அறைக்கு எதிரில் துணை மேயருக்கு அலுவலகம் ஏற்படுத்தப்பட்டது.

அலுவலக திறப்பு விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். ராஜேஸ்குமார் கலந்து கொண்டு துணை மேயருக்கான புதிய அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

மேலும் அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் பேராசிரியர் ஆகியோரின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதைத் தொடர்ந்து துணை மேயர் பூபதியை அவரது இருக்கையில் அமர வைத்து வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மேயர் து.கலாநிதி, ஆணையாளர் மகேஸ்வரி மற்றும் மாநகராட்சி கவுன்சிலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

---

**கனிமொழி கருணாநிதி எம்.பி. — அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னிலை!**

## 'கலைஞர் 100 வினாடி - வினா' மாபெரும் போட்டி!

### நேற்று தொடங்கியது! முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று பரிசு வழங்கி சிறப்புரை!

சென்னை, நவ. 23 -

திராவிட இயக்க வரலாறு, முத்தமிழறிஞர் கலைஞர் வரலாறு, திராவிட மாடல் அரசின் சாதனைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி கழக மகளிர் அணி சார்பில், கழக துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களின் முன்னெடுப்பில் மாபெரும் அறிவுத் திருவிழாவாக 'கலைஞர் 100 வினாடி வினா' போட்டிகள் 12 மண்டலங்களாக நடைபெற்று வந்தது.

கலைஞர் வினாடி - வினா நேற்று (நவம்பர்-22) காலை 9 மணியளவில் அரையிறுதிப் போட்டி அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கலைஞர் 100 வினாடி-வினா மாபெரும் இறுதிப் போட்டி இன்று (23.11.2024 - சனிக்கிழமை) காலை 9 மணியளவில் சென்னை - அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிசு வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன் தொடக்கவுரையாற்றுகிறார். கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் வரவேற்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியை கழக தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் தொகுத்து வழங்குகிறார். கழக மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் பா.ராணி நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வில் மாநில நிர்வாகிகள் அமைச்சர் கயல்விழி செல்வராஜ், காஞ்சனா கமலநாதன், சங்கரி நாராயணன், காரல் மார்க்ஸ், சித்திரமுகி சத்யவாணி முத்து, வாசுகி ரமணன், காயத்ரி சீனிவாசன், குமரி விஜயகுமார், தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., பவானி ராஜேந்திரன், மலர் மரகதம், அங்கையற்கண்ணி, சத்யா பழனிகுமார், சேலம் சுஜாதா, ரேகா பிரியதர்ஷினி, விஜிலா சத்யானந்த், மாலதி நாகராஜ், ராணி ரவிச்சந்திரன், அமலு விஜயன் எம்.எல்.ஏ., மாலதி நாராயணசாமி, மோ. தேன்மொழி, உமா மகேஸ்வரி, ஜெசி பொன்ராணி, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., அ.ரியா, யாழினி மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

---

## டைடல் பூங்கா : முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன், துரை. சந்திரசேகர், எஸ்.சந்திரன், வி.ஜி.ராஜேந்திரன், அ.கிருஷ்ணசாமி, கே.கணபதி, ஜோசப் சாமுவேல், எஸ்.சுதர்சனம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபுசங்கர், ஆவடி மாநகராட்சி ஆணையர் எஸ்.கந்தசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருமுடிவாக்கத்தில் துல்லிய பொறியியல் - தொழில்நுட்ப மையம்!

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.11.2024) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முழுவதும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் தென்னிந்தியாவி லேயே முதன்முறையாக காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமத்தால் முதற்கட்டமாக 18.18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை திறந்து வைத்தார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் புரிபவர்கள் சர்வதேச தொழில் சந்தையில் போட்டியிட அவர்களின் உற்பத்தி திறன் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும், வளர்ந்து வரும் தொழில் பிரிவிற்குள் நுழைய வழி வகை செய்யவும், தமிழ்நாட்டில் 5 இடங்களில் சுமார் 100 கோடி ரூபாயில் மெகா கிளஸ்டர் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

**துல்லிய உற்பத்தி பெருங்குழுமம், திருமுடிவாக்கம் (Precision Engineering Technology Centre)**

அதன்படி, தானியங்கி வாகனங்கள், இயந்திரங்கள், மின் மற்றும் மின்னணு உபகரணங்களில் பயன்படுத்தப்படும் துல்லிய பொறியியல் பாகங்களை உருவாக்கும் மையமாக (Hub) கருதப்படும் சென்னை மண்டலத்தில் உள்ள காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் தொழில்முனைவோர் கூட்டமைப்பினருடன் இணைந்து 47.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 33.33 கோடி ரூபாய் அரசு மானியத்துடன் துல்லிய உற்பத்தி பெருங்குழுமம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டது.

இப்பெருங்குழும திட்டத்தின் முதல் பகுதியாக 18.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 13.33 கோடி ரூபாய் மானியத்துடன் வடிவமைப்பு மையம் (Engineering Design Centre), மறு பொறியியல் பரிசோதனைக் கூடம் (Re Engineering Lab), சேர்க்கை உற்பத்தி மையம் (Additive Manufacturing Centre), மேம்பட்ட பயிற்சி மையம், காப்புரிமை (Patent) பதிவு வசதி மையம், நவீன பரிசோதனை மையம் (Testing Lab) போன்றவை நிறுவப் பட்டுள்ளன.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள 14க்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழிற்பேட்டை சங்கத்தினரால் இணைந்து உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கு ஊர்தி (Special Purpose Vehicle) மூலம் அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் பொது வசதிகளை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், இளம் தலைமுறை பொறியாளர்கள், கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பயன்படுத்தி பயன் பெறலாம்.

தமிழ்நாடு முழுவதும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்படுத்தி கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் பொதுவசதிகளை சென்னை மாவட்டத்தில் 25,000க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களும், திருமுடிவாக்கம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 1,000 தொழில் நிறுவனங்களும் பயன்படுத்தி கொள்ளலாம்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் புதிய கண்டுபிடிப்புகளுக்கு பெரிய நிறுவனங்களை சார்ந்து இருக்காமல், இத்திட்டத்தின் உயர் மென்பொருளை (Advanced Software) பயன்படுத்தி வடிவமைப்பதாலும், சேர்க்கை உற்பத்தி தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்துவதாலும், நவீன பரிசோதனை வசதிகளை குறைந்த செலவில் பெறுவதாலும், உலகத்தரம் வாய்ந்த புதிய கண்டுபிடிப்புகளை மிக குறைந்த உற்பத்தி செலவில் எவ்வித மூலதனமும் இன்றி உருவாக்கிட முடியும்.


இத்தகைய சிறப்பம்சங்களை கொண்ட உயர் தொழில்நுட்ப பிரிசிஷன் இன்ஜினியரிங் தொழில்நுட்ப மையத்தை (பொது வசதி மையம்) அரசு மானியத்துடன் உருவாக்கி, அவ்வசதிகளை தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

---

முதல்வரின் கார் ஓட்டுநர்

## பாஸ்கரன் தந்தை துரை மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, நவ. 23 -

முதல்வரின் கார் ஓட்டுநர் பாஸ்கரின் தந்தை துரை அவர்கள் நேற்று அதிகாலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு: -

எனது ஓட்டுநர் பாஸ்கரின் தந்தை துரை அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த துயருற்றேன்.

அவரது மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, தந்தையின் பிரிவால் வாடும் பாஸ்கருக்கும், அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டார்.

---

தமிழ்நாடு மின்வாரியத்திற்கும்

## அதானி நிறுவனத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லை!

### அமைச்சர் செந்தில் பாலாஜி பேட்டி!



கரூர், நவ.23-

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் அதானி நிறுவனத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என சமூக வலைதளங்களில் பரவும் வதந்திக்கு மின்சாரத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி முற்றுப்புள்ளி வைத்தார். கரூரில் செய்தியாளர்களிடம் பேசிய போது அமைச்சர் இதனை தெரிவித்தார்.

கரூர் மாநகராட்சி, மண்டலம் II வார்டு எண்34ல் நடைபெற்று வரும் காமராஜர் தினசரி காய்கறி சந்தை கட்டுமானப் பணிகளை மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்விற்குப்பின்னர் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக கரூர் காமராஜ் தினசரி காய்கறி சந்தை வணிகர்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று முதல்வர் அவர்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு இந்த காய்கறி சந்தையை மேம்படுத்துவதற்காக கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.6.75 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து, சுமார் 3955.00 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டுமானப்பணிகள் துவங்கின.

அந்த வகையில் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட கரூர் மாநகரின் அடையாளங்களில் ஒன்றான 78வருட பழமையான காமராஜ் தினசரி சந்தை மேம்படுத்தப்பட்டுவருகின்ற பணிகளை ஆய்வு செய்யப்பட்டது. இக்காய்கறி சந்தையில் 134 காய்கறி மற்றும் பழக்கடைகள் மற்றும் 25 மளிகை கடைகள் என மொத்தம் 160 கடைகள் அமைக்கப்படவுள்ளது. காய்கறி மற்றும் பழக்கடைகள் 10 × 8 என்ற அளவிலும் மற்றும் மளிகை கடைகள் 10x10 என்ற அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும் 74 சதவீதம் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பணிகள் அனைத்தும் வருகின்ற டிசம்பர் மாத இறுதிக்குள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதே போன்று கரூர் மாவட்டத்தில் புதிய பேருந்துநிலையம், நூலகம், மகளிர் தங்கும் விடுதி உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு மின்சார வாரியத்தை பொறுத்த வரையில் அதானி நிறுவனத்துடன் எந்தவிதமான வணிக ரீதியான ஒப்பந்தமும் செய்யப்படவில்லை. தமிழ்நாட்டின் மின் தேவையை கருத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கேற்ப திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒன்றிய அரசின் மின்சார துறையிடமிருந்து 1500 மெகா வாட் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்துடன் தான் தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்பந்தம் செய்துள்ளது.

குறிப்பாக சோலார் எனர்ஜி கார்பரேசன் ஆஃப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனம் தான் மற்ற மாநிலங்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்வார்கள். அதற்கேற்ப அந்த வகையில் தான் தமிழ்நாடு மின்சார வாரியம் அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு சுமார் 1500 மெகா வாட் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. அதுவும் மிக குறைந்த விலையில் ஒரு யூனிட் ரூ.2.61 பைசா என்ற அளவில் மிக மிக குறைந்த விலையில் பெறுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அதே போல் மின்னகம் செயலி மூலம் வரப்பெற்ற புகார்களுக்கு ஏறக்குறைய 95 சதவீதம் புகார்களுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. மீதமுள்ள புகார்களுக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி விரைவாக அப்பணிகளும் நடைபெற்று கொண்டு வருகின்றன.

தற்போது மின் உற்பத்திக்கு தேவையான அளவு தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் நிலக்கரி போதுமான அளவு கையிருப்பு உள்ளது. அமராவதி ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்ட மேலப்பாளையம் உயர்மட்ட பாலத்திற்கு இணைப்பு சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசுக்கு கருத்துரு தயார் செய்யப்பட்டு விரைவில் அப்பணிகள் துவங்கப்படவுள்ளது. இவ்வாறு அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாநகராட்சி மேயர் வெ. கவிதா. மாநகராட்சி ஆணையாளர் சுதா. துணை மேயர் ப.சரவணன், மண்டலக் குழுத் தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்.எஸ். ராஜா, க.அன்பரசன், எஸ். சக்திவேல், மாநகர நல அலுவலர் மரு.கௌரி சரவணன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

